**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்**
**(CEDEC)**

# நூலகவியல் தகவல் விஞ்ஞான உயர் டிப்ளோமா–2025/2026
## Higher Diploma in Library and Information Sciences – 2025/2026- (SLQF 4)

கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையமானது நூலகவியல் தகவல் விஞ்ஞான உயர் டிப்ளோமா கற்கை நெறிக்கான (2025/2026 கல்வியாண்டு) விண்ணப்பங்களைத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோருகின்றது. 1620/22 (24.09.2009) என்னும் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நூலக சேவையின் அறிவுறுத்தல்களுக்கமைய பொது நூலகம் ஒன்றில் நூலகராகப் பணியாற்றுவதற்கு அல்லது பதவி உயர்வு பெறுவதற்குரிய தகுதியாக மூன்றுவருட டிப்ளோமாவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இக்கற்கைநெறியானது மூன்று வருடப் பகுதிநேரக் கற்கை நெறியாக வழங்கப்படுகிறது. இக்கற்கையானது இலங்கையின் கல்வித் தரக் கட்டமைப்பின் (Sri Lanka Qualification Framework) நான்காம் நிலையிலுள்ளது (SLQF 4).

**தகைமைகள்:**

- ஏதேனும் ஒரு துறையில் க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) அல்லது நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

- ஏதேனும் ஒரு துறையில் NVQF level 4 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

- ஏதேனும் ஒரு துறையில் க.பொ.த உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) அல்லது மூன்று பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) சித்தியுடன் க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தியும் (C ) நூலகம் அல்லது அதுதொடர்பான துறைகளில் குறைந்தது ஐந்து வருட தொடர்ச்சியாகப் பணியாற்றிய அனுபவமும்.

**பாடநெறிக் காலம்** **:** 03 வருடங்கள் (வார இறுதி நாட்கள்)
**மொழி மூலம்** **:** தமிழ்
**கற்கை நெறிக்கான கட்டணம்** : ரூபா. **65,000/- (இரண்டு தவணைகளில்** செலுத்தலாம்)
**கற்பித்தல் முறை** : நிகழ்நிலை மற்றும் நேரடி வகுப்புகள்

விண்ணப்பிப்பதற்கான மேலதிக தகவல்களை **http://www.cedec.esn.ac.lk/hdlis** எனும் வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:** 29.07.2025

மேலதிக தகவலுக்கு:

தொலைபேசி இல: 0652227025
மின் அஞ்சல்: cedecinfo@esn.ac.lk
Web : http://www.cedec.esn.ac.lk

பதிவாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை, செங்கலடி
இலங்கை.

29-06-2025